தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம் - 2024
---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமைகள் மாற்றங்கள் கூற்று அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் தகவல்களும் உள்ளடங்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர, நிறுவகத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் மற்றும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது ணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனதுஅபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தினை கலைப்பதற்கு கருதினால ் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய ்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடியபொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளைதவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச்சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறானஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளககட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- முகாமைத்துவத்தினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்துநிலைத்திருந்தல் தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை உள்ளதாகஎன்பது சம்பந்தமாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக

காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் அடிப்படையில் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள ்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிறுவகத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன்ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிறுவகம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக என்பதும் ஆகும்.

1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பிலான கணக்காய்வு அவதானிப்புகள்

1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ''திட்டமிட்டு பேணுதல்'' நிறுவனங்களிற்கு அவசியமாக உள்ளது

1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டில் சமர்ப்பித்திருந்த நிதிக்கூற்றுக்களில் ரூபா 120,718,042 பெறுமதியான 35 ஜர்னல் குறிப்புகள் பூரணமற்றதாக, விளக்கக் குறிப்புகளை குறிப்பிடாது சமர்ப்பித்த காரணத்தால் அந்த கொடுக்கல் வாங்கல்களின் செம்மையாக்கல் விபரங்களை பரீட்சிக்க முடியவில்லை.	2024 ஆண்டின் நிதிக்கூற்றுக்களை கணக்காய்விற்காக சமர்ப்பிக்கும் போது பொது பேரேட்டின் மென் பிரதியொன்றையும் அத்துடன் சமர்ப்பிக்க வேண்டியதுடன், அந்த பொது பேரேட்டில் 35 ஜர்னல் குறிப்புகளிற்குரிய விளக்கக் குறிப்புகளுடன் சமரப்பிக்கப்பட்டுள்ளது.	கணக்கீட்டு நியமம் பிரகாரம் கொடுக்கல் வாங்கல்களிற்குரிய ஆரம்ப தகவல்கள் மற்றும் ஜர்னல் குறிப்புக்களை ஒழுங்காக நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்க வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டிற்குரிய தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்திற்காக அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்தல் மற்றும் கட்டிடங்களை வலையமைப்பு மயப்படுத்துவதற்கு (Networking) செலவிடப்பட்ட முறையே ரூபா ரூபா 649,605 தொகை மற்றும் ரூபா 3,338,268 ஆன செலவுகள் திரண்ட நிதியத்திற்கு செம்மையாக்கப்பட்டிருந்தது.	மூலதன உபகரணங்களை கொள்வனவு செய்தல் மற்றும் சீதுவ win (B) கட்டிடத்தில் வலையமைப்பு மயப்படுத்துவதற்கு கட்டுப்பாட்டு சபை அங்கீகாரத்தின் கீழ் தேசிய சமூக அபிவிருத்தி நிதியத்தினால் கொள்வனவு செய்யப்பட்டது.	கணக்கீட்டு நியமம் பிரகாரம் கொடுக்கல் வாங்கல்களை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும்.

1.6 சட்டம், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானஙகள் என்பவற்றுடனான தொடர்பு

	சட்டம், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு	இணக்கமின்மைகள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	இலஙகை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை			
	(i) 1644 நிதிப் பிரமாணம்	தின ஓட்டக் குறிப்பு மற்றும் மாதாந்த பொழிப்பு அடுத்த மாதத்தின் 10 திகதிக்கு முன்னர் கணக்காய்விற்கு வழங்க வேண்டிய போதும் நிறுவனத்திற்கு சொந்தமான 08 வாகனங்கள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	தின ஓட்டக் குறிப்பு மற்றும் மாதாந்த பொழிப்பு அடுத்த மாதத்தின் 10 திகதிக்கு முன்னர் கணக்காய்விற்கு அனுப்ப தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.	நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	(ii) 1645 நிதிப் பிரமாணம்	வாகனங்கள் தொடர்பாக லொக் குறிப்புப் புத்தகங்களை நாளாதுவரையாக பேணிச் சென்றிருக்கவில்லை.	நிறுவனத்தின் பொருப்பிலுள்ள அனைத்து வாகனங்கள் தொடர்பாகவும் வாகன லொக் புத்தகங்களை நாளாதுவரையாக பேணிச் செல்ல தேவையான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளதுடன் அந்த நடவக்கைகள் செய்து முடிக்கப்பட்டுள்ளது.	-மேற்படி-
(ஆ)	2016 திசெம்பர் 29 இன் 30/2016 இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 பந்தி	ஒவ்வொறு எரிபொருள் பரிசோதனையின் பின்னரும் 12 மாதகால எல்லையின் பின்னர் அல்லது 25000 கிலோ மீற்றர் தூரத்தை செலுத்திய பின்னர் அல்லது இயந்திரத்துடன் தொடர்புடைய பிரதான திருத்தத்தின் பின்னர் எனும் விடயங்களிற்கு இடையே முதலாவது இடம்பெறும் சந்தர்ப்பத்தின் பின்னர் மீண்டும் எரிபொருள் பரிசோதனை செய்ய வேண்டிய போதும், நிறுவனத்திற்கு சொந்தமான 08 வாகனங்களின் எரிபொருள் பரிசோதனை செய்திருக்காததுடன் வாகனங்கள் தொடர்பான உள்ளக கட்டுப்பாடும் பலவீனமான நிலையில் காணப்பட்டது.	2025 ஆண்டின் எரிபொருள் பரிசோதனை நடவடிக்கைகள் மே மாதத்தில் செய்யப்படவுள்ளது.	சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 32,150,386 ஆன மிகையானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 12,241,680 ஆனது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் 19,908,706 ஆன வளர்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வளர்சிக்கு வருமானங்களின் வளர்ச்சி முக்கிய காரணமாக இருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறமையின்மை

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக 2017		

	ஆண்டில் ரூபா 1.000 மில்லியன் திறைசேரி நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் வடிவமைப்பு மற்றும் நிர்மாணித்தல் (design and built) பெறுகைகள் செயற்பாட்டின் கீழ் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு ஒப்பந்த பெறுமதி ரூபா 818.795 மில்லியன் ஆன (வெட் மற்றும் எதிர்பாரா செலவுகள் தவிர) தொகைக்கு அமைச்சரவை நியமித்த பெறுகைகள் குழுவின் அங்கீகாரத்தின் கீழ் 2017 செப்டம்பர் 19 திகதி ஆரம்பித்து 2020 ஏப்ரல் 04 திகதி நிறைவு செய்ய ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு பதிலாக 2017 முதல் 2024 ஆண்டு வரை வருடாந்தம் வரவு செலவு திணைக்களத்தின் மூலம் ஒதுக்கியிருந்த நிதி ஏற்பாடு கூட்டுத் தொகை ரூபா 2,181.13 மில்லியன் ஆகும். இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.		
(i)	2017 முதல் 2024 ஆண்டு வரை நிர்மாணம் மேற்கொள்ளப்பட்ட போதும் அதனால் எதிர்பார்த்த விளைவுகளை எதிர்பார்த்தவாறு அடைந்து கொள்ள இந்த அறிக்கை திகதி வரை இயலாதுள்ளது. மேற்குறித்த ஒப்பந்த பெறுமதிக்கு மேலதிகமாக ரூபா 21.537 மில்லியன் மதிப்பீடொன்றும் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. எட்டு சந்தர்ப்பங்களில் நாட்டில் நிலவிய நெருக்கடி நிலைமை காரணமாகவும் இரண்டு சந்தர்ப்பங்களில் விலை முரண்களை நட்டஈடு செய்த தாமதம் காரணமாகவும் ஒப்பந்த காலம் நீடிக்கப்பட்டிருந்தது. கட்டிடத்	பதில் வழங்கப்படவில்லை.	கருத்திட்ட நோக்கங்களை அடைந்து கொள்ளவும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் இந்த கைத்தொழிலை நிறைவு செய்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	தொகுதியின் wing B பகுதி வேலைகள் நிறைவு செய்து ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் wing A பிரிவின் வேலைகள் நிறைவு செய்து ஒப்படைக்கப்பட்டு இருக்கவில்லை. வகுப்புகளை நடாத்த இடவசதி இல்லதமையால் வேலைகள் நிறைவு செய்யப்படாத இந்த பகுதியின் முதலாம் மற்றும் இரண்டாம் மாடிகளில் வகுப்புகளை நடாத்த பயன்படுத்தப்பட்டிருந்தது.		
(ii)	2024 ஒக்டோபர் 30 திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் பிரகாரம் இரண்டு கட்டிடத் தொகுதியினதும் Wing B இன் நிலத்திற்கு கற்களை பரப்புதல் மற்றும் Wing A இன் மூன்றாம் மாடியில் 2,511.25 சதுர அடி அளவு நிலமானது பலிங்கு பரப்புவதற்கு (Tile) எஞ்சியிருந்தது. பரப்பியிருந்த தளப்பரப்பு கற்களில் (Tile) சில இடங்களில் நிறைவு பலவீன மட்டத்தில் காணப்பட்டது. விலைமனு அளவுத்தட்டத்தின் பிரகாரம் பயன்படுத்த வேண்டிய செரமிக்ஸ் தளப்பரப்பு கற்கள் உரிய தரத்துடன் இல்லையென பரீட்சிக்கப்பட்டிருந்ததுடன் தரமற்ற மூலப்பொருட்களை பயன்படுத்தி பூர்த்தி செய்வது தொடர்பாக கவனம் செலுத்தாது ரூபா 45.554 மில்லியன் ஒப்பந்ததாரரிற்கு செலுத்தப்பட்டிருந்தது. சில சுவருகளில் இடைக்கிடையே வெடிப்புகள் அவதானிக்கப்பட்டதுடன் 2021 திசெம்பர் 14 திகதி விலை முரணிற்காக நட்டஈடு செய்ய வழங்கப்பட்ட அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் கணிப்பிடப்பட்ட விலை முரண் ரூபா 63.68 மில்லியனாகும். (வெட் இன்றி) கட்டிடம் தரத்திற்கு இணங்க	wing B இன் நிலத்திற்கு டயில் பரப்பி முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. wing A இன் மூன்றாம் மாடியில் 100 சதுர அடி அளவிற்கு டயில் பரப்புவதற்கு எஞ்சியுள்ளது. இந்த டயில்களின் பூர்த்தியை தயாரிக்க அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	தரத்தின் பிரகாரம் நிர்மாணித்து அதன் பிரகாரம் கொடுப்பனவு செய்ய வேண்டும்.

	நிர்மாணிக்கப்பட்டிருக்காத போதும் அந்த விலை முரணிற்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.		
(ஆ)	சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் சமூக சேவை வித்தியாலயம், பதிவாளர் அலுவலகம் மற்றும் பயிற்சி பிரிவிலிருந்து சேவை பெறுக்கொள்ளும் மாணவர்கள் குறித்த கொடுப்பனவிற்காக பயன்படுத்தும் மாணவர் கொடுப்பனவு வவுசர் பத்திரங்கள் (Paying Vouchers) பிரிவுகளினால் வேறு நிறுவனங்களிற்கு (பிராந்திய நிலையங்களிற்கு) பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக வருமானம் உரியவாறு அறவிடப்படல், கணக்கீடு செய்வது தொடர்பாக பரீட்சிக்க முடியாதிருந்ததுடன் குறித்த தரப்பினரிற்கு வழங்க வேண்டிய வவுசர்களின் பிரதிகள் கணக்குப் பிரிவிற்கு வழங்கப்பட்டிருந்தது. வருமானத்தை கணக்கீடு செய்யும் செயன்முறை உரியவாறு பின்பற்றப்படாமை மற்றும் உள்ளக கட்டுப்பாட்டின் பலவீனம் காரணமாக வருமானம் கணக்கீடு செய்யப்படுவதில் முறைகேடுகள் நிகழ இடம்பாடு ஏற்டுகின்றமை மாணவர்கள் இடைநடுவே பாடநெறியை கைவிடுவதன் மீது பாடநெறிக்காக அறவிடப்பட்ட கட்டணத்தை மீள்செலுத்தும் போது பிரச்சினைக்குறிய நிலைமை ஏற்படுவதாகவும் அவதானிக்கப்பட்டது.	இது தொடர்பாக குறித்த பிரிவுகள் அறிவுருத்தப்பட்டதுடன் பிராந்திய நிலையத்திற்காக விநியோகிக்கும் போது பிரிவிற்கு விநியோகிக்கப்பட்ட Paying-in-voucher புத்தகங்களை வழங்காது களஞ்சியத்திலிருந்து நேரடியாக பிராந்திய நிலையத்திற்காக விநியோகிக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறே இது தொடர்பாக குறித்த பிரிவு அறிவுருத்தப்பட்டதுடன் எதிர்காலத்தில் பற்றுச் சீட்டு புத்தகமொன்று முடிவடைந்த உடனே இன்னுமொரு புத்தகத்தை விநியோகிக்க நடவடிக்கை எடுக்குமாறு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.	வருமானத்தை உரியவாறு கணக்கீடு செய்ய தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும.
(இ)	தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் நிதியத்திற்கு உரியதாக நிதி பெறுவனவு மற்றும் செலவு செய்தல் தொடர்பாக செயற்பட நிதியத்திற்காக ஆரம்பிக்கப்பட்ட தனியான நடைமுறைக் கணக்கொன்று	இதுவரை தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் நிதியத்திற்காக நடைமுறை கணக்கொன்றை பராமரித்துச் சென்றிருக்காததுடன் எதிர்காலத்தில் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் நிதியத்திற்கு உரியதாக	தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்திற்கு தனியான நடைமுறை கணக்கொன்றை திறக்க வேண்டும்.

	இருக்காததுடன் அதற்காக தற்போது பராமரிக்கப்படும் நடைமுறைக் கணக்கொன்றின் மூலம் கொடுக்கல் வாங்கல் செய்யப்படுகின்றன. அக் கணக்கு மூலம் பாடநெறி கட்டணத்திற்குரிய அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் அறிக்கையிடப்படுவதுடன், நிதியத்திற்குரிய அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் அதனூடாக மேற்கொள்ளப்பட்டிருந்தது.	கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ள கட்டுப்பாட்டு சபை அங்கீகாரத்துடன் நடைமுறை கணக்கொன்றை ஆரம்பிக்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதென.	
(ஈ)	நிறுவனத்தின் வருடாந்த பட்டமளிப்பு விழாவை நடாத்துவதற்காக முற்பணமாக வெளி நிறுவனமொன்றிற்கு வழங்கியிருந்த ரூபா 120,000 தொகை மீளாய்வாண்டு இறுதி வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை.	நிறுவனத்தின் வருடாந்த பட்டமளிப்பு விழாவை 2024 ஜுலை மாதத்தில் நடாத்த திட்டமிட்டதால் அதற்காக BMICH இற்கு ரூபா 120,000 முற்பணத்தை செலுத்தி நாள் ஒதுக்கிக் கொள்ளப்பட்டது. எனினும் பாடநெறியின் பரீட்சை புள்ளி வெளியிடுவதில் ஏற்பட்ட தவறான நிலைமை காரணமாக அத் திகதி 2024 ஒக்டோபர் வரை பிற்போடப்பட்டது. எனினும் 2024 ஆண்டினுள் BMICH இடம் வேறு நாள் ஒன்றை ஒதுக்கிக் கொள்ளும் இயலுமை இல்லாது போனதால் தாமறை மொட்டு கலை அரங்கத்தில் பட்டமளிப்பு விழாவை நடாத்த தீர்மானிக்கப்பட்டது. இத் தொகையை திருப்பிச் செலுத்த முடியாதென BMICH கட்டுப்பாட்டு அதிகார சபையினால் அறிவிக்கப்பட்டுள்ளது.	குறித்த தொகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அரசிற்கு ஏற்பட்ட நட்டத்தை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(உ)	நிறுவனத்திற்கு சொந்தமான மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 10,600,000 ஆன களணி மாணவர் விடுதி 2020 ஜுன் மாதம் முதல் பயன்படுத்தி வந்த பொருட்களுடன் அறிக்கை திகதி வரை விளைவற்று காணப்பட்டன. இந்த விடுதி பயன்படுத்தாது இருந்த காலம் 04 ஆண்டுகளை விஞ்சி இருந்ததுடன் அதனை உரியவாறு பராமரிக்காததால் விடுதி அழிவடைந்து	நிறுவனம் 2020 ஆண்டில் சீதுவ லியனகே முள்ள பிரதேசத்தில் நிறுவப்பட்டவுடன் மாணவர்கள் களணி விடுதியிலிருந்து வெளியேறி சீதுவிற்கு அருகில் தங்கியிருந்தார்கள். 2020 ஆண்டில் கொவிட் தொற்று காரணமாக நிறுவனத்தின் அனைத்து பாடநெறிகளின் அனைத்து விரிவுரைகளும் நிகழ்நிலை ஊடாக மேற்கொள்ளப்பட்டன. 2022 ஆண்டில் களணி விடுதியின் திருத்த வேலைகளிற்காக பெற்றுக் கொண்ட செலவின மதிப்பீடு ரூபா 3.1 மில்லியன்	சொத்துக்கள் தொடர்பாக பொருத்தமான செயற்பாடுகளை எடுக்க வேண்டும்.

காணப்பட்ட போதும் முகாமைத்துவத்தினால் இந்த ஆதனங்கள் தொடர்பாக விரைவில் பொருத்தமான செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	ஆனது. போதிய குத்தகை தொகைக்கு வேறு தரப்பினரிற்கு விடுதியை வழங்குவதென ஆகும். அதற்காக கட்டிடத்தை திருத்தித் தருமாறு கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. மீண்டும் ஆதன பெறுமதி தொடர்பாக மதிப்பீடொன்றை மேற்கொண்டு கட்டிடத்தை விற்பனை செய்து சீதுவ பக்கமாக கட்டிடமொன்றை கொள்வனவு செய்வதற்கான தேவைப்பாட்டை தெளிவுபடுத்தி அமைச்சரவை விஞ்ஞாபனமொன்றை சமர்ப்பிக்க தேவையான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதென.